**3.4.4:** Institutional social responsibility activities in the neighborhood community in terms of education, environmental issues like Swachh Bharath, health and hygiene awareness, delivery of free/ subsidized health care and socio economic development issues carried out by the students and staff, including the amount of expenditure incurred during the last five years additional information

| Year | Paper cutting activity |
|---|---|
| 2015 | Flood relief program |
| 2016 | Happy teeth campaign |
| 2017 | Live surgical workshop and student convention |
| 2017 | International OMFS day |
| 2017 | MOU with global hospital |



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மண்ணிவாக்கம் அம்பேத்கர் நகர் மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கிய தாகூர் பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் சித்ரா சந்திரன். உடன், (இடமிருந்து) மேலாளர் செல்வகுமார், துணை முதல்வர் டாக்டர் சி.ஜெ.வெங்கடகிருஷ்ணன்.

**Dinamani** 12. 12. 2015

**Dinamani**

சென்னை ★ வியாழக்கிழமை, 3 நவம்பர், 2016

# ‘பள்ளி மாணவர்களில் 60 சதவீதம் பேருக்கு சொத்தைப் பல் பிரச்னை’

**தாம்பரம், நவ. 2:** தனியார் பள்ளி மாணவர்களை ஒப்பிடும்போது, அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் 60 சதவீதம் பேருக்கு சொத்தைப் பல் பிரச்னை உள்ளதென தாகூர் பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் சித்ரா ஆர்.சந்திரன் கூறினார்.

வண்டலூரை அடுத்த ரத்னமங்கலம் தாகூர் பல் மருத்துவக் கல்லூரியில் அரசு, தனியார் பள்ளி மாணவர்களுக்கு இலவச பல் மருத்துவப் பரிசோதனை முகாம், விழிப்புணர்வு கண்காட்சி மூன்று நாட்கள் நடைபெற்றது.

இதில் பங்கேற்க தாம்பரம், வண்டலூர் சுற்றுப்புறங்களில் உள்ள 11 அரசு, தனியார் பள்ளிகளில் பயிலும் 1,722 மாணவர்கள், தாகூர் பல் மருத்துவக் கல்லூரிக்கு பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் இலவசமாக பல் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. சொத்தைப் பல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெறுவதற்கான இலவச அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்த முகாம் குறித்து கல்லூரி முதல்வர் சித்ரா ஆர்.சந்திரன் கூறியது:

அரசு பள்ளி மாணவர்களில் 60 சதவீதம் பேர் உரிய பராமரிப்பின்மையால் பல் சொத்தையாகி பல்லை அகற்றும் நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு பள்ளி மாணவர்கள் மத்தியில் பல் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு உருவாக்கப்பட வேண்டும். பல் துலக்குவதன் அவசியம் குறித்து உரிய விழிப்புணர்வை உருவாக்குவதில் பெற்றோர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது என்றார் அவர்.



தாகூர் பல் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற மருத்துவ முகாமில் பங்கேற்ற பள்ளி மாணவர்கள்.

## ஆன்மிக சிந்தனை

நம்மிடம் பணம் இருப்பிலே இருந்தால் ஆபத்துக்கு உதவும். புண்ணியம் இருந்தால் தெய்வங்கள் கை கொடுக்கும். அதனால் மேன்மேலும் பூஜையும், தர்மமும் செய்து புண்ணியத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

– காஞ்சி ஸ்ரீமகாபெரியவர்

கர்த்தர் எளியவரின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார்.

– சங்கீதம் 69:33

கொடுக்கல் வாங்கலும், நட்பும் இல்லாத (இறுதி) நாள் வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் தொழுகையை முறையாகக் கடைப்பிடித்து ஒழுகட்டும். நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (தான தர்மங்களை) செலவு செய்யட்டும்.

– அல்குர்ஆன் 14:31

## இன்றும் நாளையும்

**வெள்ளிக்கிழமை (1-12-2017)** — ஹேவிளம்பி ஆண்டு, கார்த்திகை 15

**சனிக்கிழமை (2-12-2017)** — ஹேவிளம்பி ஆண்டு, கார்த்திகை 16

## இன்றைய நிகழ்ச்சிகள்

## நாளைய மின்தடை

### விழிப்புணர்வு



சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வையொட்டி பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் வழங்கிய தாம்பரம் வட்டார போக்குவரத்து அலுவலர் இளங்கோவன். மோட்டார் வாகன ஆய்வாளர்கள் செல்வி, சீனிவாசன், தமிழ்நாடு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி உரிமையாளர் கூட்டமைப்பின் தலைவர் முரளிதரன் உள்ளிட்டோர்.

# சினிமா ஃபைனான்சியர் அன்புச்செழியன் அலுவலகத்தில் போலீஸார் சோதனை

**சென்னை, நவ. 30:** சென்னை, தியாகராய நகரில் உள்ள சினிமா ஃபைனான்சியர் அன்புச்செழியன் அலுவலகத்தில் போலீஸார் வியாழக்கிழமை சோதனை மேற்கொண்டனர். அதில் கம்ப்யூட்டர் ஹார்ட் டிஸ்க், டைரிகள் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டன.

# ஆர்.கே. நகர் இடைத் தேர்தல்: ஒரே நாளில் 24 ரெளடிகள் கைது

**சென்னை, நவ. 30:** சென்னை, ஆர்.கே. நகர் இடைத்தேர்தலையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒரே நாளில் 24 ரெளடிகள் கைது செய்யப்பட்டனர்.

# ஓய்வுபெற்ற காவல் ஆய்வாளர் வீட்டில் 45 பவுன் நகை திருட்டு

# இலங்கை மீனவர்கள் 6 பேர் கைது

### சொற்பொழிவு



# புதிய சட்ட விதிமுறைகளை அமல்படுத்த மாற்றுத் திறனாளிகள் வலியுறுத்தல்

**சென்னை, நவ. 30:** மாற்றுத் திறனாளிகளுக்கான புதிய சட்ட விதிமுறைகளை தமிழக அரசு அரசாணை வெளியிட்டு சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

# 'பகுதிநேர ஆசிரியர்களுக்கு உடனே புதிய ஊதியம் வழங்க வேண்டும்'

# 'வாய், முகத்தாடை சீரமைப்பு அறுவை சிகிச்சை மருத்துவர்கள் அதிகரிக்க வேண்டும்'



# மாடித் தோட்டம் அமைக்க பயிற்சி

# 'பல் மருத்துவர்களின் தேவை அதிகரிப்பு'



தாகூர் பல் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச வாய்-முக சீரமைப்பு மருத்துவர் தின விழாவில் மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார் வாய்-முக சீரமைப்பு அறுவைச் சிகிச்சை மருத்துவர் எஸ்.ராம்குமார். உடன் (இடமிருந்து) தாகூர் மருத்துவக் கல்லூரி டீன் ஏ.சாந்தா, மருத்துவக் கண்காணிப்பாளர் திருநாராயணன், பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் சித்ரா ஆர்.சந்திரன், துறைத் தலைவர் ஜிம்சன்.

**தாம்பரம், பிப். 14:** நாளுக்குநாள் அதிகரித்து வரும் சாலை விபத்துகளில் சிக்கி முகம், தாடை பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் முகச் சீரமைப்பு பல் மருத்துவர்களின் தேவை அதிகரித்துள்ளது என்று இந்திய வாய்-முக் சீரமைப்பு மருத்துவர்கள் சங்கச் செயலர் டாக்டர் எஸ்.ராம்குமார் கூறினார்.

வண்டலூரரை அடுத்த ரத்னமங்கலம் தாகூர் பல் மருத்துவக் கல்லூரியில் திங்கள்கிழமை நடைபெற்ற சர்வதேச வாய்-முக சீரமைப்பு மருத்துவர்கள் தின விழாவில் அவர் மேலும் பேசியது: கடந்த 10 ஆண்டுகளில் வியக்கத்தக்க வளர்ச்சி பெற்று வரும் பல் மருத்துவத் துறை, வாய்ப்புற்று நோயாளிகளுக்கு மட்டுமல்லாமல், விபத்தில் சிக்கியவர்களின் முகத்தைச் சீரமைப்பதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது.

பல் மருத்துவக் கல்வி பயிலும் மாணவர்கள், விபத்தில் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு உடனடியாக அவசர சிகிச்சை மேற்கொள்வதற்கான துரித நடவடிக்கையிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

15.02.2017

Dinamani

Dinamani

# குளோபல் மருத்துவமனையுடன் தாகூர் பல் மருத்துவக்கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்



தாகூர் பல் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாற்ற விழாவில் (இடமிருந்து) முகச்சீரமைப்புத் துறைத் தலைவர் டாக்டர் ஜிம்சன், துணை முதல்வர் வெங்கட கிருஷ்ணன், தாகூர் கல்விக் குழுமத் தலைவர் எம்.மாலா, குளோபல் மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு இயக்குநர் டாக்டர் எஸ்.ராஜா சுந்தரம், முதல்வர் சித்ரா சந்திரன், குளோபல் புற்றுநோய் மருத்துவர்கள் ராம்பாபு, சத்யா.

**தாம்பரம், மே 27:** சென்னை வண்டலூரை அடுத்த ரத்னமங்கலம் தாகூர் பல் மருத்துவக் கல்லூரியில் வாய், தொண்டை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு குளோபல் மருத்துவமனையுடன் இணைந்து சிகிச்சை மேற்கொள்ள உதவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

தாகூர் பல் மருத்துவக்கல்லூரி தலைவர் பேராசிரியர் எம்.மாலா முன்னிலையில், கல்லூரி முதல்வர் டாக்டர் சித்ரா ஆர்.சந்திரன், குளோபல் மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு இயக்குநர் டாக்டர் எஸ்.ராஜா சுந்தரம் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு பரிமாறிக் கொண்டனர்.

இது குறித்து கல்லூரி முதல்வர் டாக்டர் சித்ரா என்.சந்திரன் செய்தியாளர்களிடம் கூறியது

தாகூர் பல் மருத்துவக் கல்லூரியில் வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு முகச் சீரமைப்புத் துறைத் தலைவர் டாக்டர் ஜிம்சன் தலைமையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அறுவை சிகிச்சைக்குப்பின் கூடுதலாக மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் கீமோதெரபி, கதிர் வீச்சு சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் குளோபல் மருத்துவமனையில் சிகிச்சை பெற வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் குளோபல் மருத்துவமனை புற்றுநோய் மருத்துவர்கள் மூலம் மருத்துவ அறிவாற்றல் பயிற்சி பெற புரிந்துணர்வு ஒப்பந்தம் பேருதவி புரியும் என்றார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற வாய், முகம் புற்றுநோய் குறித்த பயிலரங்கில் இந்திய முகச்சீரமைப்பு மருத்துவர்கள் சங்கச் செயலர் ராம்குமார், தமிழ்நாடு கிளைச் செயலர் தமிழ் செல்வன், குளோபல் மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு இயக்குநர் டாக்டர் எஸ்.ராஜா சுந்தரம், ராம்பாபு, சத்யா, எஸ்.ஆர்.எம்.பல் மருத்துவக் கல்லூரி பேராசிரியர் செந்தில் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.